சீடராவோம்! இயேசுவுக்குப்புகழ்! சீடராக்குவோம்!

'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XIII ஆகஸ்ட் 2022 சான்று : 8

## கூட்டொருங்கியக்கத்தில் மிளிரும் சுதந்திரம்

புதிய பணியாளர்கள் பயிற்சி - தங்கச்சிமடம்

புதிய பணியாளர்கள் பயிற்சி - அமைதியகம்

புதிய பணியாளர்கள் பயிற்சி - கமுதி

வட்டாரத் தியானக் கூட்டம்- மகிண்டி மகிகேல்பட்டணம்

**பாசத்திற்குரிய நற்செய்திப் பணிக்குடும்பமே,**

இம்மாத இதழ் வழியாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் ஆண்டவருக்கு நன்றி கூறி மகிழ்கிறேன். ''அனைத்திற்கும் மேலாக உம் பெயரையும் வாக்கையும் மேன்மையுறச் செய்துள்ளீர்'' (திபா 138:2) இந்த இறைவார்த்தையில் எல்லாவற்றிற்கும் மேலாக அவரது பெயர் மற்றும் இறைவார்த்தை உயர்த்தப்பட்டிருப்பதை நம்மில் யாருக்கும் விளங்காமல் இருக்க முடியாது. அதை மிஞ்சி வேறொன்றுமில்லை. இது பழைய ஏற்பாட்டிலேயே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தாவீதுக்கு அந்த முழு உண்மை வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இறைக்கூற்றையும் சான்றுரையையும் நாடித் தேடுங்கள் என்று அவர்கள் சொல்லாததனால் அவர்களுக்கு விடிவு காலம் வராது என்பது உறுதி என்று (எசா 8:20) தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

திருச்சட்டத்தையும் இறைச்சான்றையும் ஆலோசியுங்கள். அந்த வார்த்தைகளின்படி அவர்கள் விடை கூறாவிடில் மறுநாள் ஒளியை அவர்கள் காணமாட்டார்கள் என்று நம் கத்தோலிக்க வுல்காத்தா மொழி பெயர்ப்பு கூறுகிறது. இன்னும் பல மொழி பெயர்ப்புகளிலும் ''திருவிவிலியத்தையும் அதற்கான சான்று நூலையும் கவனிக்க வேண்டும். இந்த இறைவார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை'' என்று கடுமையாகச் சாடுகிறது. எனவே கடவுளிடம் கொண்டு சேர்க்காத எந்தவொரு பக்தி முயற்சியையும் அதை இறைவார்த்தைகளோடு உரசிப் பார்க்காமல் பின்பற்றக்கூடாது. தனிப்பட்ட மனிதர்களின் கற்பனைக் காட்சிகளோ, எண்ணங்களோ திருஅவைக்குள் புகுத்தப்படக் கூடாது. இப்படிப் பல்வேறு மூட நம்பிக்கைகள் நம்மில் புகுந்திருக்கின்றன.

திருவிவிலியத்தின்படி தந்தைக் கடவுளிடம் பரிந்து பேசுகிறவர், இணைப்பாளர் ஒருவர் மட்டும்தான் இருக்க முடியும். (உரோ 8:34, 1 யோவா 2:1 எபி 7:25, 1 திமோ 2:5, எபி 9:15, எபி 12:24) அது இயேசு ஒருவரே. அவரே இணைப்பாளர் மற்றும் நமக்காகப் பரிந்து பேசுகிறவர். நாங்கள் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியினின்று மாறுபட்ட ஒன்றை நாங்களோ, விண்ணிலிருந்து வந்த தூதரோ யார் அறிவித்தாலும் அவர்கள் சபிக்கப்படுக என்று (கலா 1:8) புனித பவுல் எச்சரிக்கை விடக்கிறார். மீட்பு என்பது இயேசுவிடம் மட்டும்தான் உள்ளது. விண்ணுலகம் செல்ல வேண்டுமாயின் இவ்வுலகிலேயே மீட்பைப் பெற்றிருக்க வேண்டும். இயேசுவே ஆண்டவர் என்று உள்ளத்தில் விசுவசித்து மிக உறுதியாய் நம்பி வாயினால் அறிக்கையிடுபவரே மீட்புப் பெறுவர் என்பது திருவிவிலியத்தின் அடிப்படை உண்மை (உரோ 10:10) அத்தகைய மீட்பின் அனுபவமும் முடிவும் இயேசு ஒருவர் மட்டுமே. அன்னை மரியாளும் புனிதர்களும் இயேசுவை நோக்கியே தங்கள் வாழ்க்கைச் சான்றுகள் மூலம் வழிநடத்துகிறார்கள்; முன்மாதிரி காட்டுகிறார்கள்.

ஆனால், தற்போது தங்கள் கற்பனை வளத்தாலும், போலி சாட்சிகளாலும் புற்றீசல் போல பலரை உருவாக்கி வைத்து இயேசுவுக்கு மேலாக பறைசாற்றப்படுகிறார்கள். இயேசுவுக்கு மேலாகவோ, இயேசுவுக்கு இணையாகவோ யாரும் உயர்த்தப்படக் கூடாது. இயேசு என்பதை அடிமனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். இயேசு நீதிபதியாய் வருவது என்பது உண்மைதான். ஆனால், இயேசு நீதியை

தான் வைத்துக்கொண்டு இரக்கத்தை அன்னை மரியாளிடம் கொடுத்திருக்கிறார். எனவே, செபமாலையையும் உத்தரியத்தையும் பிடித்துக் கொண்டே விண்ணகத்துக்குச் சென்றுவிடலாம் என்ற தவறான போதனைகளும் தற்போது வலம் வந்து கொண்டிருக்கினறது. ஒரு ஊரில் மாதா திருவிழா அன்று அம்மனுக்கு பாலாபிஷேகம் செய்வதுபோல் அன்னை மரியாளுக்கும் பாலாபிஷேகம் செய்திருக்கிறார்கள் நாம் எங்கே போய் கொண்டிருக்கின்றோம்?

வழியும் உண்மையும் வாழ்வும் நானே என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை என்று (யோவான் 14:6) ஆண்டவர் கூறியிருப்பதைப் புறக்கணிக்கலாமா? தெளிவாகத்தானே சொல்லியிருக்கிறார்? ஒருவர் இயேசுவைச் சொந்த மீட்பராக ஏற்றுக்கொண்டு மனம் மாறி இயேசுக் கிறிஸ்து ஆண்டவரின் இரத்தத்தால் கழுவப்பட்டு தங்கள் பாவங்களிலிருந்து விடுதலை பெற்று வாழும்போது மட்டுமே மீட்புப் பெற முடியும். இதைத் தவிர விண்ணகம் செல்ல எந்த குறுக்கு வழியும் கிடையாது. போலிப் போதனைகளுக்கு முற்றிலும் விலகி வாழ்வோம். கோவில்களில் கடவுளுக்கு இணையாக யாருடைய அடையாளங்களையும் வைக்கக் கூடாது. சுரூபங்கள் இல்லாமை நிலைக்குக் குறைக்கப்பட வேண்டும் என்பது இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அழைப்பாக உள்ளது. அன்னை மரியாள் புனிதர்களின் சுரூபங்களை வைத்துத்தான் ஆகவேண்டும் என்றால் நமக்காகச் செபிப்பது போல கோவிலை நோக்கி அமைக்க வேண்டும்.

கடவுளுக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை யாருக்கு? எதற்கு? கொடுத்தாலும் அது கடவுள் அருவருக்கிற சிலை வழிபாடாகும். நம் திரு அவையில் உள்ள பக்தி முயற்சிகள் அனைத்தும் இயேசுவை நோக்கியதாகத்தான் இருக்க வேண்டும். நடைமுறையில் நடக்கும் செயல்பாடுகளைப் பார்த்தால் மனம் வேதனைப் படுகிறது. அவரால்தான் முழு உடலும் தசை நார்களாலும், மூட்டுகளாலும் இறுகிப் பிணைக்கப்பட்டு ஊட்டம் பெற்று கடவுளின் விருப்பத்திற்கேற்ப வளருகிறது (கொலே 2:19). இயேசு ஆண்டவரால் மட்டுமே உடல் உள்ளம் ஆன்மா இம் மூன்றும் இறுகிப் பிணைக்கப்பட்டு ஊட்டம் பெற்று இறைவனின் திருவுளத்திற்கேற்ப வளர செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்.

உங்கள் சகோதரர்

நற்பணி **அ. சகாயராஜா**

## ஜூலை 2022 புதிய பணியாளர்கள் பயிற்சி

• சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி-I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 03.07.2022 அன்று நடைபெற்றது. 15 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை செயலர், நற்பணி J. மோரிபுஷ்பம், நற்பணி A. சகாயராஜா, நற்பணி G.M.S. ராணி ஆகியோர் வழிநடத்தினர்.

• சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – II காளையார்கோவில் தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 03.07.2022 அன்று நடைபெற்றது. 15 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி நற்பணி A. சூசைஅருள்மேரி, நற்பணி V. செங்கோல்மேரி, நற்பணி A.அற்புத ஞானய்யா, நற்பணி T. குழந்தைதாஸ் ஆகியோர் வழிநடத்தினர்.

- சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – III தங்கச்சிமடம் புனித குழந்தை தெரசாள் கோவிலில் 09.07.2022 அன்று நடைபெற்றது. 33 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி J. மோரிபுஷ்பம், நற்பணி X. லூர்துமோரி, நற்பணி K. பில்கேட் சாவியோ ஆகியோர் வழிநடத்தினர்.

- சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – IV இராமநாதபுரம் புனித செபமாலை அன்னை கோவிலில் 10.07.2022 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி A. தனிநாயகம், நற்பணி J. மேரி புஷ்பம், நற்பணி G. ஜெனிபர் ஆகியோர் வழிநடத்தினர்.

- சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – V குருமிளாங்குடி புனித சுவக்கின் அன்னம்மாள் கோவிலில் 10.07. 2022 அன்று நடைபெற்றது. 09 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி M. சேசுநேசன், நற்பணி X. சகாய லூயி ஆரோக்கியசாமி, நற்பணி S. மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினர்.

- சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – VI சிவகங்கை வியான்னி அருள்பணி மையத்தில் நடைபெற்றது. 04 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி M. சேவியர், நற்பணி I. ஜோசப் சேவியர், நற்பணி L. ஜோசப் சேவியர் ஆகியோர் வழிநடத்தினர்.

- தஞ்சாவூர் மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி அரிமளம் புனித சூசையப்பர் கோவிலில் 10.07.2022 அன்று நடைபெற்றது. 28 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி S. சேசுராஜா, நற்பணி A. அந்தோணி சேவியர் ராஜ், நற்பணி R. ராஜ்குமார் ஆகியோர் வழிநடத்தினர்.

- சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – VII காயாவயல் அமலஅன்னை அமைதியகத்தில் 17.07.2022 அன்று நடைபெற்றது. 13 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை செயலர், நற்பணி A. சகாயராஜா, நற்பணி S. ஆரோக்கியசாமி, Sr. ஜோஸ்பின் பச்சை ஜோதி CIC ஆகியோர் வழிநடத்தினர்.

- சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – VIII சாயல்குடி புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 17.07.2022 அன்று நடைபெற்றது. 17 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி J. மோரிபுஷ்பம், நற்பணி GMS. ராணி, நற்பணி A. சந்திர புஷ்பா ஆகியோர் வழிநடத்தினர்.

- சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – IX கமுதி புனித அந்தோணியார் கோவிலில் 24.07.2022 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி நற்பணி GMS. ராணி, நற்பணி A. யூஜின் அமல், நற்பணி லிட்வின் ஆகியோர் வழிநடத்தினர்.

- சிவகங்கை மறைமாவட்டப் பதிய பணியாளர்கள் பயிற்சி – X இராசசிங்கமங்கலம் தூய ஆவியார் கோவிலில் 24.07.2022 அன்று நடைபெற்றது. 11 பேர் கலந்துகொண்ட இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன் நற்பணி S. மோட்ச அலங்காரம் நற்பணி A. ஆரோக்கிய மேரி, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினர்.

• 02.07.2022 அன்று சூராணம் பங்கு வடவிருக்கை கிராமத்தில் சிறப்பு தொடர் களப்பணி நடைபெற்றது. நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி S. மோட்ச அலங்காரம் அவர்களும் 08.07.2022 அன்று நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி S. ஆரோக்கியசாமி அவர்களும் 09.07.2022 அன்று தளிர்தலை கிராமத்தில் நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி S. மோட்ச அலங்காரம் அவர்களும் பங்கேற்றனர்

• குண்டுகுளம் பங்கு வீரமங்கலம் புனித லூர்தன்னை கோவிலில் தொடர் களப்பணி மற்றும் வழிபாடு நடத்தப்பட்டது. 10.07.2022 அன்று நற்பணி A.R. சூசைராஜ். நற்பணி T. குழந்தை தாஸ், நற்பணி ஸ்டீபன் அவர்களும் 17.07.2022 அன்று நற்பணி S. இராஜேந்திரன், நற்பணி S. ஆரோக்கியசாமி அவர்களும் 24.07.2022 அன்று நற்பணி R. ஆரோக்கியசாமி நற்பணி G. மிக்கேல் பிரபாகர் அவர்களும் வழிநடத்தினர்.

• 06.07.2022 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக்குழு கூடுகை நடைபெற்றது. 29 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி M. சேசுநேசன், நற்பணி A. சகாயதமிழச்செல்வி, நற்பணி அருள்மேரி ஆகியோர் வழிநடத்தினர்.

• 06.07.2022 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக்குழு கூடுகை நடைபெற்றது. 65 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி A. சூசைஅருள்மேரி, நற்பணி V. செங்கால்மேரி, நற்பணி K. தவச்செல்வி, நற்பணி A. அற்புத ஞானய்யா, நற்பணி T. வின்சென்ட் நாதன் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

• 16-17.07.2022 ஆகிய தேதிகளில் ஓரியூர் பங்கு மண்டலக்கோட்டை கிராமத்தில் தொடர்களப்பணி நடைபெற்றது. நற்பணி A.R.சூசைராஜ், நற்பணி S. அந்தோணி பிரகாஷ் ஆகியோர் வழிநடத்தினர்.

• 24.07.2022 அன்று சாலைகிராமம் பங்கு சீவலாதி கிராமத்தில் தொடர்களப்பணி நடைபெற்றது. நற்பணி X. அந்தோணி விக்டர், நற்பணி A. அந்தோணி பிரபு ஆகியோர் வழிநடத்தினர்.

• 23-24.07.2022 ஆகிய தேதிகளில் குருமிளாங்குடி பங்கில் தொடர்களப்பணி நடைபெற்றது, நற்பணி P. பிரகாசம், நற்பணி A. சேவியர் ஆகியோர் வழிநடத்தினர்.

• 23-24.07.2022 ஆகிய தேதிகளில் தங்கச்சிமடம் பங்கு அரியான்குண்டு கிராமத்தில் தொடர்களப்பணி நடைபெற்றது, நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி A. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினர்.

• 24.07.2022 அன்று தஞ்சாவூர் மறைமாவட்டம் சம்மனசுர் பங்கில் நற்பணி சூசைராஜ். நற்பணி ஞானசெல்வம் ஆகியோர் குணமணிக்கும் வழிபாட்டை வழிநடத்துனர்.

• சூராணம் பங்கு சேத்தூரில் 27 மற்றும் 30 தேதிகளில் நற்பணி இராஜேந்திரன், நற்பணி அலெக்சாண்டர் ஆகியோரும், உச்சானி கிராமத்தில் 29 மற்றும் 31 தேதிகளில் நற்பணி. குழந்தை தாஸ், நற்பணி ஸ்டீபன்ராஜ் ஆகியோர் சிறப்பு களப்பணி நடத்தினர்.

**முத்துப்பேட்டை வட்டாரம்**

முத்துப்பேட்டை வட்டார நற்செய்திப் பணியாளர்களின் தியானக்கூட்டம் 25.06.2022 அன்று நற்பணி சகாய எஸ்தலின் லதா அவர்களின் இல்லத்தில் நற்செய்திப் பணியாளர்களின் துவக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. நற்பணி A. சகாயராஜா தொடர்பாளராக கலந்து கொண்டு 'மணக்கண்கள் திறக்கப்பட' என்ற தலைப்பில் லூக் 24:43-45 என்ற இறைவார்த்தை பகுதியின் ஒளியில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். 26 பணியாளர்கள் கலந்து கொண்டனர். குழுவாகப் பிரிந்து சென்று கலந்துரையாடல் நடைபெற்றது. இறுதியில் பரிந்துரை செபத்துடன் கொள்கைப்பாடல் பாடி கூட்டம் நிறைவுற்றது. வாழ்வாக்க கொடுக்கப்பட்ட இறைவார்த்தை திருப்பாடல் 119:18.

நற்பணி V.S. **தேயுஸ் கிளாரா,** வட்டாரக் கண்காணிப்பாளர்

**சருகணி வட்டாரம்**

சருகணி வட்டாரத் தியானக் கூட்டம் 03.07.2022 ஞாயிறு அன்று சருகணியில் திரு இருதயங்களின் ஆலயத்தில் நடைபெற்றது. காலை 10.30 மணியளவில் ஆவியானவர் பாடலுடன் துவங்கியது. தொடக்க வழிபாட்டை புனித மாற்கு குழுவைச் சார்ந்த நற்பணி அருள்தாஸ், நற்பணி சபாஷ்ராணி. நற்பணி வேத செங்கோல், நற்பணி அருள்துரை வழிநடத்தினார்கள். பின் வட்டார கண்காணிப்பாளர் அனைவரையும் வரவேற்று கடந்த கூட்ட அறிக்கையினை வாசித்து ஒப்புதல் பெற்றார்கள். தொடர்பாளராக நற்பணி M. சேவியர் கலந்துகொணடு 'மணக்கண்கள திறக்கப்பட' லூக் 24:25 என்ற தலைப்பில் இறைச்செய்தி வழங்கினார். மணக்கண்கள் திறக்கப்பட புனித தந்தை பியோ வாழ்வை எடுத்துக்காட்டாய் பயன்படுத்தினார்கள். பிற்பகல் 3 மணிக்கு ஆன்மீக ஆய்வு நடைபெற்றது சிறப்பு. பின் இரு குழுவாகப் பிரிந்து குழு விவாதம் நடைபெற்றது. குழுத்தலைவர்கள் தங்கள் குழுவின் சார்பாக கருத்துக்களை வழங்கினார்கள். வட்டார பொறுப்பாளரின் அறிவிப்புகளுடன். இறை வேண்டுலுடன். நன்றியுடன். கொள்கைப்பாடல் பாடப்பட்டு 4 மணிக்கு நிறைவு பெற்றது. 29 பணியாளர்கள் பங்கு பெற்று பயனடைந்தார்கள்.

**வட்டாரப் பொறுப்பாளர்,** சருகணி

**இராமேஸ்வரம் வட்டாரம்**

இராமேஸ்வரம் வட்டாரத் தியானக் கூட்டம் 23.07.2022 அன்று காலை 10.45 மணிக்கு நற்பணி A. பாக்கியம் இல்லத்தில் தொடக்க செபத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. 16 பணியாளர்கள் கலந்து கொண்டனர். நற்பணி M. மரிய கிரகோரி அவர்கள் எதில் நான் குறைபடுகிறேன்? என்ற தலைப்பில் செய்தி வழங்கினார்கள். வாழ்வாக்க இறைவார்த்தை கொடுக்கப்பட்டது (திபா 51:10-11).

வித்தியாசமான
எண்களும்
அத்தியாவசியமான
இறைவார்த்தைகளும்

**உரோமையர் 12:21**

தீமை உங்களை
வெல்லவிடாதீர்கள்,
நன்மையால் தீமையை வெல்லுங்கள்!

நன்றி செபத்துடன் கொள்ளைப்பாடல் பாடி மாலை 4.00 மணியளவில் கூட்டம் நிறைவுற்றது. மதிய உணவு இல்லத்தாரால் வழங்கப்பட்டது. திரு இருதய சகோதரர்கள் சபை தலைவரும் செயலரும் தியானக் கூட்டத்தை பார்வையிட்டனர்.

நற்பணி P.**அந்தோணிம்மாள்**

**ஆவுடைப் பொய்கை வட்டாரம்**

இராமேஸ்வரம் வட்டாரத் தியானக் கூட்டம் 24.07.2022 அன்று பேதுரு நகர் நற்பணி. விக்டோரியா இல்லத்தில் காலை 10.00 மணிக்கு தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. எதில் நான் குறைபடுகிறேன்? என்ற தலைப்பில் தொடர்பாளர் நற்பணி சேசுராஜ் செய்தி வழங்கினார். மதிய உணவுவுக்குப்பின் பணியாளர்கள் 2 குழுக்களாக பிரிந்து குழுப் பகிர்வு செய்தனர். இறுதி செபம். கொள்கைப் பாடலுடன் நிறைவு பெற்றது. இத்தியானக் கூட்டத்தில் 19 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

நற்பணி **ஆ. வில்லியம் செப,**வட்டாரக் கண்காணிப்பாளர்.

**மகிண்டி மிக்கேல்பட்டணம் வட்டாரம்**

மகிண்டி மிக்கேல்பட்டணம் வட்டாரத் தியானக் கூட்டம் 17.07.2022 ஞாயிறு அன்று காலை 10 மணியளவில் திருவரங்கத்தில் நற்பணி அடைக்கலம் இல்லத்தில் நடைபெற்றது. தொடக்க வழிபாட்டை நற்பணி லூர்துமேரி, நற்பணி பாத்திமாராணி ஆகியோர் இணைந்து நடத்தினர். கூட்டத்தில் தொடர்பாளராக நற்பணி ஜஸ்டின் கபிரியேல் கலந்துகொண்டு 'எதில் நான் குறைவுபடுகிறேன்?'. என்ற தலைப்பின் அடிப்படையில் செய்தி வழங்கினார். பின்பு குழுப்பகிர்வு நடைபெற்றது. 15 பேர் கலந்து கொண்ட இக்கூட்டம் பரிந்துரை செபம் மற்றும் கொள்கைப் பாடலுடன் மாலை 4.30 மணிக்கு நிறைவுற்றது.

நற்பணி **கு. ஜஸ்டின் கபிரியேல்,** தொடர்பாளர்

**காளையார்கோவில் வட்டாரம்**

காளையார்கோவில் வட்டாரத் தியானக் கூட்டம் 24.07.2022 அன்று ஞாயிறு பள்ளித்தம்பம் நற்பணி அற்புத ஞானய்யா - நற்பணி ஆரோக்கியமேரி அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. தொடக்க செபம் நற்பணி ஜோசப் ஸ்டீபன் அவர்களும், இறைப்புகழ்ச்சி நற்பணி செஸ்தியான் அவர்களும் பாவமன்னிப்பு வழிபாடு நற்பணி குழந்தை தெரஸ் அவர்களும் வழிநடத்தினார்கள். தொடர்பாளராக நற்பணி ச. சகாயராணி அவர்கள் கலந்துகொண்டு நான் எதில் குறைவுபடுகிறேன்? (திப 2:4-5, எரே 2:2, பிலி 1:5-8, உரோ 5:5,8, யாக்கோபு 4:5, திபா 14:2. மத் 10:37, கலா 5:22) என்ற தலைப்பில் சிந்தனைகளை வழங்கினார்கள். மதிய உணவுக்கு பின் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு 1. நான் பணியாளர் ஆனபோது. அர்ப்பணம் பெற்றபோது என்ன மனநிலையில் இருந்தேன்? 2. இன்று எப்படி இருக்கின்றேன்? 3. தொடக்க அன்புக்கு திரும்ப வழிமுறைகள் எவை? ஆகிய கேள்விகளின் அடிப்படையில் குழு ஆய்வு செய்து கருத்துக்கள் பகிரப்பட்டது. பிறகு கடந்த கூட்ட அறிக்கை வாசிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இறுதி செபம் தொடர்பாளர் அவர்கள் செபித்து. கொள்ளைப் பாடல் படி தியானக் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

நற்பணி **வே. செங்கோல் மேரி,**வட்டாரக் கண்காணிப்பாளர்

இந்த மாதத்தில் வாழ்வின் நான்கு நிலைகளை பற்றி சிந்திப்போம். ஆங்கிலத்தில் இதை Life Position என்பார்கள். இந்த நான்கு நிலையை வைத்து நமது வாழ்வு, மனப்பான்மை, அன்றாட செயல்பாடுகள், நமது வெற்றி. தோல்விகள் அனைத்தும் முடிவு செய்யப்படுகின்றன. அவற்றைப்பற்றி இந்த மாதம் சிந்தித்து பார்ப்போம்.

**1. நான் சரி. நீ சரியில்லை** (I am OK. You are not OK)

இந்த நிலையில் இருப்போர் தாங்கள் எப்போதும் சரியாக இருப்பது போன்றும் மற்றவர்கள் இருப்பதும் செய்வதும் சரி இல்லை என்ற நிலையில், இவர்கள் மற்றவர்களை அடக்கி தாங்கள் விருப்பம் போல் மற்றவர்கள் நடக்க வேண்டும் என விரும்புவார்கள். நான் நினைத்தது தான் சரி என்ற நிலையில் எப்பொழுதும் நிற்பார்கள்.

**2. நான் சரி, நீ சரி** (I am OK. You are OK)

இந்த நிலையில் இருப்போர் தாங்களும் சரி மற்றவர்களும் சரி, தங்களின் வாழ்வும். பேச்சும். செயலும் சரி, மற்றவர்களின் வாழ்வும் பேச்சும் செயலும் சரி என்ற நிலையில் பார்ப்பார்கள். இவர்கள் சுய மதிப்பு மிக்கவர்களாவும் மற்றவர்களை மதிப்பவர்களாகவும் இருப்பார்கள். எல்லோரும் எல்லாம் பெற்று வாழ வேண்டும் மற்றவர்களும் வாழ வேண்டும் என்ற நிலையில் இருக்கும் இவர்கள் இணைந்த கூட்டு வெற்றியை அடைவார்கள். இவர்கள் மற்றவர்களை ஒருபோதும் துன்புறுத்த மாட்டார்கள். அதே வேளையில் மற்றவர்களும் தன்னை துன்புறுத்த அனுமதிக்க மாட்டார்கள்.

**3. நான் சரியில்லை, நீ சரி.** (I am not OK. You are OK)

இந்த நிலையில் இருப்போர் தாங்கள் எப்போதும் பேசுவதும் செயல்படுவதும் சரியானது இல்லை என்றும் மற்றவர்கள் பேசுவதும் செயல்படுவதும் சரியானது என்ற நிலையில் இருப்பார்கள். இந்த நிலையில் இருப்போர் தற்கொலை எண்ணம் கொண்டிருப்பார்கள். வாழ தைரியம் இல்லாமல் மற்றவர்களுக்கு வாய்ப்பு கொடுத்துவிட்டு தான் பிறந்த நோக்கத்தை அறிய எந்த முயற்சியும் எடுக்காமல் இருப்பார்கள். இவர்கள் சுய மதிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க மாட்டார்கள். மற்றவரின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுத்து அதற்கு தியாகம் என்ற பெயரை வாங்க முயற்சிப்பார்கள்.

**4. நான் சரியில்லை, நீ சரியில்லை.** (I am not OK. You are not OK)

இந்த நிலையில் இருப்போர் நானும் சரியில்லை இந்த சமூகமும் சரி இல்லை என்ற நிலையில் இருந்து செயல்படுவார்கள். இத்தகையர் தங்கள் வாழ்வைப்

பற்றியும் மற்றவரின் வாழ்வைப் பற்றியும் பொருட்படுத்த மாட்டார்கள். தங்களை மற்றவர்கள் மதிப்பு குறைவாக நடத்தினாலும் இவர்கள் மற்றவர்களை மதிப்பு குறைவாக நடத்தினாலும் இவர்களுக்கு ஒரு பாதிப்பாக தெரியாது. இந்த நிலையில் இருப்போர்தான் மனித வெடிகுண்டுகளாக மாறுகிறார்கள். தன்னையும் அழித்து மற்றவர்களை அளிப்பார்கள். இவர்களுக்கென்ற பெரிய கொள்கை, கோட்பாடு, மதிப்பீடுகள் எதுவும் இல்லை.

மேலே சொல்லப்பட்ட இந்த நான்கு வாழ்வின் நிலைகளுக்கு ஏராளமான உதாரணங்கள் இருக்கின்றன. இதை வாசிக்கும் பொழுதே நமக்கு நாம் கண்ட, பழகிய, செய்தித்தாளில் படித்த விஷயங்கள் உதாரணமாக தோன்றும்.

**அசைபோட அரை நிமிடம்:**

''தன்னிலை உணர்ந்தாள் நாம் விரும்பிய நிலையை அடையலாம்''.

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

### நீதியை மார்புக் கவசமாய்.....

உண்மையான கிறிஸ்தவனாக கிறிஸ்தவளாக, வாழ்வதென்பது ஆண்டவர் இயேசு சொன்னதுபோல அது இடுக்கமான வாயில். அதில் வருந்தி நுழைய முயல வேண்டும். கிறிஸ்தவ வாழ்வு மலர் பாதையல்ல. நல்ல கிறிஸ்தவ வாழ்வு வாழவேண்டிய நாம் ஆவிக்குரிய வாழ்வில் நிலைத்து நிற்க போர்க்களத்தில் வீரத்துடனும் விவேகத்துடனும் போராடும் போராளியைப் போல போர்வீரனைப் போல விழிப்பாக இருக்க வேண்டும். ஆவிக்குரிய போராட்டத்தில் போராடி தோற்றுவிடாமல் வெற்றி வாகை சூடிக் கொள்ள ஆறுவகையான போர்க்கருவிகளை ஒவ்வொரு கிறிஸ்தவனும் அணிந்து கொள்ள வேண்டுமென்று பட்டியிலிட்டுக் கூறியிருக்கின்றார்.

ஓராண்டு காலமாக ''உண்மையை'' இடைக்கச்சையாகக் கட்டிக் கொள்ள வேண்டும் என்று தியானித்தோம். இனி அடுத்த ஆயுதமான ''நீதியை'' மார்புக் கவசமாக எப்படி அணிந்து கொள்வது என்று விவிலியம் நமக்குப் பல வழிகளைக் கற்றுத் தந்திருக்கின்றது. மார்புக் கவசம் என்பது கழுத்து முதல் அடிவயிறு வரையிலும் உள்ள உள்ளுறுப்புக்களைப் பாதுகாக்கக்கூடிய முக்கியமான தற்காப்பு உறை. ஒரு போர்வீரன் மார்புக் கவசத்தை முழுமையாகவோ அல்லது சரியாகவோ அணிந்து கொள்ளாமல் போர்க்களத்தில் நீண்ட நேரம் நீடித்து நின்று அவரால் போராட முடியாது. ஏனென்றால், எங்கிருந்தாவது பாய்ந்து வரும் ஈட்டியோ, அம்போ, குண்டோ நெஞ்சிலோ, விலாவிலோ, வயிற்றிலோ பாய்ந்து அவரைக் கொன்றுவிடும்.

பவுலடியார் சொன்ன நீதியென்ற மார்புக் கவசம் நம் இதயத்தைக் கர்சிக்கும் சிங்கம்போல் நம்மை வீழ்த்துவதற்குக் காத்திருக்கும் சாத்தானிடமிருந்து

காக்கின்றது என்கிறார் (எபே 6:14). இயேசு ஆண்டவரும் தம் சீடரிடம் "மனிதருக்குள் செல்லும் எதுவும் அவர்களைத் தீட்டுப்படுத்த முடியாது என உங்களுக்குத் தெரியாதா?" (மாற் 7:18) என்று வெளியிலிருந்து வரும் எதுவும் மனிதனைத் தீட்டுப்படுத்த முடியாது என்கிறார். "மனிதருக்கு உள்ளேயிருந்து வருவதே அவர்களைத் தீட்டுப்படுத்தும் ஏனெனில் மனித உள்ளத்திலிருந்தே பரத்தமை, களவு, கொலை, விபச்சாரம், பேராசை, தீச்செயல், வஞ்சகம், காமவெறி, பொறாமை, படிப்புரை, செருக்கு, மதிகேடு ஆகியவற்றைச் செய்யும் தீய எண்ணங்கள் வருகின்றன" (மாற் 7:20-22). என்கிறார் நம் ஆண்டவர் இயேசு இதயத்திலிருந்து உருவாகக் கூடிய பன்னிரெண்டு வகையான தீமைகளைப் பட்டியலிடுகின்றார். இதை அறிந்துதான் புனித பவுலடியார் இதயத்தைக் காக்க "நீதி" என்ற மார்புக் கவசத்தை அணிந்து கொள்ளுங்கள் என்கிறார். நம் இதயம்தான் இரத்தத்தை சுத்திகரிப்பு செய்து நம் உடல் உறுப்புகளுக்கு எடுத்துச் செல்கிறது. அது தன் வேலையைச் சரியாகச் செய்யவில்லையென்றால் நம் உடலின் இயக்கமும் நின்றுவிடும்.

ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி பெற நம் இதயத்தைத் தூய்மையானதாக வைத்திருக்க நீதி என்ற மார்புக் கவசத்தைச் சரியாக அணிந்து கொள்ளவேண்டும். சாத்தான் நம்மை வீழ்த்த வீணான சிந்தனைகளையும், தீமையான எண்ணங்களையும், திட்டங்களையும் நம் எண்ணங்களில் தோன்ற வைக்கின்றன. "ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கனவே பாவம் செய்தாயிற்று" (மத் 5:28) என்று நமதாண்டவர் மோசேயின் கட்டளையைக் கடுமையாக்கியிருக்கிறார். நம் உள்ளத்திலிருந்தான் அனைத்து நெறிகேடுகளையும் தீமைகளையும் அலகை உருவாக்குகின்றன. "நம் எண்ணங்களையும், இதயச சிந்தனைகளையும் உள்ளுணர்வுகளையும் ஆண்டவர் சோதித்து அறிகின்றார் (எரோ 11:20) ஆவிக்குரிய போராட்டத்தில் நம் இதயத்தைக் கறைபடாமல் காத்துக்கொள்ள நீதியை மார்புக் கவசமாய் அணிந்து கொள்வோம்.

நற்பணி **ச.சகாயராணி** இராம்நகர்.

## சந்திப்பும் சாட்சியும்

ஒரு பணியாளர் அர்ப்பணம் பெற்று ஒரு சில ஆண்டுகள் கடந்தன. அந்தக் குடும்பத்தில் அவர் மட்டுமே பணியாளர். குடும்பத்து உறுப்பினர்களை பணியாளர்களாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் இருந்தது. இதற்கிடையில் எதிர்பாராத விதத்தில் அந்தப் பணியாளரின் துணைவியார் விண்ணகப் பிறப்படைந்துவிட்டார். பலருக்கும் இவர் இந்த நற்செய்திப் பணியில் தொடர்வாரா அல்லது பின்வாங்கி போவாரா என்று சந்தேகங்கள் எழும்பின. ஆனால், தன்னை அழைத்தவர் உண்மையுள்ளவர், அவருடைய திட்டத்தின்படியே தன்னை நடத்துகிறார் என்பதை உணர்ந்து, அவ்வப்போது அவரைச் சந்தித்து ஆறுதல்படுத்தி ஆற்றல்படுத்திய நற்செய்தி

பணியாளர்களின் சந்திப்பால் நற்செய்திப் பணியாளராக தொடர்ந்தார். அவருக்குள் இருந்த கவலைகளையும் பயத்தையும் நம்பிக்கையின்மையையும் போக்குவதற்கு உதவியாக இருந்தவர் அந்த வட்டாரத்தின் கண்காணிப்பாளர். அந்த இழப்பு ஒரு வலிதான், ஈடு செய்ய முடியாத ஒன்றுதான், என் குடும்பத்தில் ஒரு நபர் இறந்துவிட்டார் எனக்கு இப்படி ஒரு சோகம் நடந்து விட்டது. நான் ஏன் இன்னும் நற்செய்திப்பணியாளராய் வாழ வேண்டும் என்று பின்வாங்கி போகாமல், இயேசுவோடு இணைந்து பயணிப்பேன் என்கிற மனநிலையில் அந்த பணியாளர் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார். முன்பு இருந்ததை விட பல மடங்கு அவரது செயல்களில் முன்னேற்றமும், அவருக்குள் புதைந்து கிடந்த பல திறமைகளும் இப்போது வெளிவந்து கொண்டிருக்கின்றன. அன்புப் பணிக்குடும்பமே நமது வாழ்விலும் நமது குடும்பத்திலும் பல இழப்புக்களை குறிப்பாக இறப்புக்களை நாம் சந்திக்கலாம். உடனே நாமும் மற்ற மனிதர்களைப்போல எனக்கு ஏன் இப்படி ஒரு துன்பம் இழப்பு என்று கடவுளைத் பழித்து கடவுளுடைய உறவிலிருந்து பிரிந்து போகாமல், ஆகட்டும் இறைவா என்ற அன்னை மரியின் மனநிலையில் இழப்புக்களையும் குறிப்பாக இறப்புக்களையும் தாண்டி இறையாட்சி பணியாற்றுவோம். சந்திப்பின் சாட்சிகளாய் தொடர்ந்து பயணிப்போம் கிறிஸ்துவின் மனநிலையில்.

நற்பணி **ரா. ராஜ் குமார்,** செக்காலை வட்டாரம்.

## ஆண்டுத் தியானம் 2022

| வ.எ | நாள் | மையம் | நெறியாளர்கள் | வழிநடத்துபவர் |
|---|---|---|---|---|
| 1. | 19,20,21 ஆகஸ்ட் 22 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. ஜஸ்டின் கபிரியேல் நற்பணி S. இராஜேந்திரன் | அருள்பணி ஜோசப் இசிதோர். தூத்துக்குடி |
| 2. | 26,27,28 ஆகஸ்ட் 22 | அமல அன்னை அமைதியம், காயாவயல் | நற்பணி S. ஆரோக்கியசாமி நற்பணி C. கபிரியேல் | |
| 3. | 02,03,04 செப். 22 | அமல அன்னை அமைதியம், காயாவயல் | நற்பணி M. சேசுநேசன் நற்பணி சேவியர் | |
| 4. | 09.10.11 செப். 22 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி I. புஷ்பராஜ் நற்பணி A. யூஜின் அமல்ராஜ் | |
| 5. | 16,17,18 செப். 22 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி L. ஜோசப் இருதயம் நற்பணி G. மிக்கேல் பிரபாகர் | |
| 6. | 23,24,25 செப். 22 | அமல அன்னை அமைதியம், காயாவயல் | நற்பணி I. செபஸ்தியான் நற்பணி R. ராஜ்குமார் | |
| 7. | 14,15,16 அக். 22 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி A. தனிநாயகம் நற்பணி G. ஜெனிபர் | |
| 8. | 21,22,23 அக். 22 | அமல அன்னை அமைதியம், காயாவயல் | நற்பணி A.R. சூசைராஜ் நற்பணி V. செபாஸ்டின் தார்சிஸ் | |

நான் ஏன் நற்செய்திப் பணி செய்ய வேண்டும்? இது நம் ஆண்டவரின் கட்டளை. விண்ணுலகிலும் மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியாரின் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைபிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ உலக முடிவு வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் என்று ஆண்டவரே நமக்கு வாக்குறுதி அளித்துள்ளார் (மத் 28:18-20). நற்செய்தி என்றால் என்ன? இது மிகவும் நல்ல செய்தியானதால் நாடுகளையும் கலாச்சாரங்களையும் தலைமுறைகளையும் மொழிகளையும் நம்பிக்கைகளையும் கடந்து செல்கிறது. எனவேதான் புனித பவுல் நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தியை நீங்கள் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருந்தால் அதன் வழியாக மீட்பு அடைவீர்கள். இல்லையேல் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பொருளற்றதே. நான் பெற்றுக் கொண்டதும் முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்படைத்ததும் இதுவே. மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார் என்று குறிப்பிடுகிறார் (1கொரி 15:2-4). இந்த உண்மையைச் சீடர்கள் புரிந்து கொள்ளாததால் ஆண்டவர் அவர்களைப் பார்த்து அறிவிலிகளே இறைவாக்கினர் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே என்று கடிந்து கொண்டு பின்பு அவரைப் பற்றி மறைநூலில் எழுதியுள்ளவைகளை அவர்களுக்கு விளக்கினார் (லூக் 24:25-27).

நான் ஏன் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்? நான் நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும் அதில் நான் பெருமைப்பட ஒன்றும் இல்லை. இதைச் செய்ய வேண்டியக் கட்டாயம் எனக்கு உள்ளது. நற்செய்தியை அறிவிக்காவிடில் ஐயோ எனக்குக் கேடு. இதை நானாக விரும்பிச் செய்தால் எனக்குக் கைமாறு உண்டு. நானாக விரும்பாவிட்டாலும் இது என்னிடம் ஒப்படைக்கப்பட்டப் பொறுப்பாக இருக்கிறது என்று பவுல் கூறுகிறார் (1 கொரி 9:16-17).

ஆண்டவர் சீடர்களைப் பார்த்து உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள். நம்பிக்கைக் கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர் என்றார். அவர்களும் புறப்பட்டுச் சென்று எங்கும் நற்செய்தியைப் பறைசாற்றினர். ஆண்டவரும் உடனிருந்து செயல்பட்டு நிகழ்ந்த அரும் அடையாளங்களால் அவர்களுடைய வார்த்தையை உறுதிபடுத்தினார் (மாற் 16:15-20). நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்பது ஆண்டவர் விண்ணேற்றம் செல்லும்முன் கடைசியாக சீடர்களுக்குக் கொடுத்த கட்டளை. நாம் நற்செய்தியை சொல்லும்போது ஆண்டவரது கட்டளைக்குக் கீழ்படிகிறோம். ஆண்டவரது கட்டளைக்குக் கீழ்படிந்து சீடர்கள் புறப்பட்டுப் போய் எங்கும் நற்செய்தியை அறிவித்தார்கள். அவர்கள் அறிவித்த நற்செய்தி வாயிலாக அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெற்றன. இதைத் திருத்தூதர் பணிகளில் பல இடங்களில் வாசித்து அறிகிறோம். ஆனால் எந்தத் திருத்தூதரும் நான் இயேசு கொடுத்த கட்டளையால் நற்செய்தி அறிவிக்கிறேன் என்று கூறவில்லை. அப்படியென்றால் அவர்கள் எவ்வாறு நற்செய்தியை அறிவித்தார்கள். இதற்கு பதில் திப.1:8ல்

காணப்படுகிறது. தூய ஆவியானவர் உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் என்றார். இன்றைக்கு நாம் நற்செய்திப் பணிக்கு சாக்குப் போக்குச் சொல்கிறோம் என்றால் நாம் இன்னும் தூய ஆவியானவரால் வழி நடத்தப்படவில்லை என்பதை உணர்வோம்.

நற்செய்திப் பணி மதத்தைச் சார்ந்தது அல்ல. மனிதன் கடவுளைத் தேடுவது மதம். கடவுள் மனிதனைத் தேடுவது நற்செய்தி. மனிதன் படியேறி உயரத்தில் இருக்கும் கடவுளை அடைய முயற்சிப்பது மதம். கடவுள் இறங்கி வந்து மனிதனை கட்டித் தழுவுவது நற்செய்தி. இந்தக் கொள்கைளைப் பின்பற்றினால் கடவுளைக் கண்டுபிடிக்கலாம் என்று கூறுவது மதம். என்னைப் பின்பற்றி வா என்பது நற்செய்தி (யோ 13:13, லூக் 5:27). கடவுள் இப்படி இருப்பார் அப்படி இருப்பார் அல்லது எப்படியும் இருப்பார் என்று கூறுவது மதத்தின் பிரிவினைகள். என்னைக் காண்கிறவர் கடவுளைத் தந்தையைக் காண்கிறார் என்று கூறுவது நற்செய்தி (யோவா 14:9). காவி உடை அணிந்து திருத்தலங்களை நோக்கி உடலை வருத்தி சாமி கும்பிடப் போகிறேன் என்று அலைவது மதம். வழியும் உண்மையும் வாழ்வும் நானே. நானே உலகின் ஒளி. ஆடுகளுக்காக உயிரைக் கொடுக்கிறேன் என்று சொன்னவரிடம் நம்மை ஒப்புவிப்பது நற்செய்தி. நற்செய்தி என்றால் நடந்து முடிந்தவைகளின் அறிக்கையாகும். ஏனென்றால் கல்வாரி சிலுவையில் அவர் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டார். எனவே தான் புனித பவுல் பெற்றுக் கொண்டதும் முதன்மையானது எனக் கருதி உங்களிடம் ஒப்புவித்ததும் இதுவே. மறைநூலில் எழுதியுள்ளவாறு கிறிஸ்து நம் பாவங்களுக்காக இறந்து அடக்கம் செய்யப்பட்டார். மறைநூலில் எழுதியுள்ளவாறே மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்பட்டார் என்று வழியுறுத்திக் கூறுகிறார் (1 கொரி 15:3-4). என்னைக் குற்றப்படுத்துவது நற்செய்தி அல்ல என் குற்றத்திலிருந்து பாவத்திலிருந்து என்னை விடுவிப்பதே நற்செய்தி. எனவே நம் ஆண்டவர் நமக்காக எல்லாவற்றையும் நிறைவாய் செய்து முடித்து விட்டார் என்பதை நம்புவோம். இந்த உண்மைக்கு பிறர் மத்தியில் சான்று பகர்வோம்.

நற்பணி **M.விசுவாசம்,** செஞ்சை.

## அறிவாளி

ஒருவன் கயிற்றைப் பிடித்து மலையேறிக் கொண்டிருந்தான் எதிர்பாரா விதமாக அவன் கால் வழுக்கி கீழே விழுந்தான். அவன் இடுப்பில் கயிறு கட்டியிருந்ததால் முற்றிலும் கீழே விழாமல் ஒரு கட்டத்தில் தொங்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தான். அந்த வேளையில் கடவுளை நோக்கி கதறினான். கடவுள் அவனிடம் ''இடுப்பில் கட்டியிருக்கும் கயிற்றை அவிழ்த்துவிடு'' என்றார். அவனோ பயத்தில் கயிற்றை அவிழ்க்கவில்லை. சில நாட்களுக்குப் பின் சிலர் அவனைக் கண்டுபிடித்தார்கள். அவன் பிணமாகத் தொங்கிக் கொண்டு இருந்தான். அதுவும் ஐந்து அடி உயரத்தில். ஆகவே இறைவார்த்தையைக் கேட்டு அவற்றின்படி செயல்படாவிட்டால் இது போன்ற பேராபத்தைச் சந்திக்க நேரிடும். ஆக, இறைவார்த்தையைக் கேட்டு அவற்றின்படி செயல்படுகிறவரே அறிவாளி.

மலைப்பொழிவில் இயேசு பேசிய அவருடைய வார்த்தைகளைக் கேட்டு

அவற்றின்படி செயல்படுகிற எவரும் அறிவாளி என்றும் அவருடைய வார்த்தைகளை கேட்டு அவற்றின்படி செயல்படாத எவரும் அறிவிலி என்றும் (மத் 7:24-27) கூறுகிறார். இந்த இரு வகையான மனிதர்களையும் உற்று கவனித்து உண்மையை அறிந்து செயல்படுவோம். இயேசு கிறிஸ்து கூறுகின்ற இருவகை மனிதர்களும் திருஅவையின் உறுப்பினர்கள். வாரந்தவறாமல் உற்சாகமாக கோவிலில் சென்று செபிப்பவர்கள், காணிக்கை கொடுப்பவர்கள் இறைவனை அறிந்ததாக எண்ணுபவர்கள் இறைவார்த்தைகளைக் கேட்டவர்கள். இருவகை மனிதர்களும் வீடு கட்ட வேண்டும் என்ற ஆசை உடையவர்கள். ஆகவே, இவர்கள் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் ஒரே மாதிரியான வெளித்தோற்றமுடைய வீட்டைக் கட்டுகிறார்கள். அவைகள் அருகருகே உள்ள வீடுகளாகக் கூட இருக்கலாம். ஆனால், இந்த இரு வகையான வீடுகளுக்குள் எளிதில் கண்டுபிடிக்க முடியாத ஒரு முக்கியமான வேறுபாடு காணப்படுகிறது. அது பூமிக்கு அடியில் வீட்டின் அடித்தளத்தில் இருக்கிறது. ஆபத்து நாளில்தான் அந்த வேறுபாடு வெளிப்படும்.

இறைவார்த்தையைக் கேட்டு அவற்றின்படி செயல்படுகிற எவரும் 'அறிவாளி'

''அறிவாளி'' என்று பாராட்டப்படுவர் தன்னுடைய வீட்டின் வெளித்தோற்றத்தோடு வீட்டின் அடித்தளத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பாறை மீது வீட்டை கட்டுகிறார்.

''அறிவிலி'' என்று குற்றப்படுத்தப்படுபவர் தன்னுடைய வீட்டின் அடித்தளத்தை பற்றி அக்கறை கொள்ளாமல் வெளித்தோற்றத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து மணல் மீது வீட்டை கட்டுகிறார்.

இங்கே இரண்டு வகையான வீட்டிற்கும் ஒரே நேரத்தில் ஆபத்து வருகிறது. பாறைமீது அடித்தளம் போட்டவரோ ஆபத்து நேரத்திலும் நம்பிக்கையை இழக்கவில்லை. மணல் மீது அடித்தளம் போட்டவரோ ஆபத்து நேரத்தில் நம்பிக்கை இழந்துவிட்டார். நான் ஆண்டவருக்கு அதை செய்தேன் இதை செய்தேன் என்று முணுமுணுக்கலானார். மழை பெய்தது, ஆறு பெருக்கெடுத்து ஓடியது, பெருங்காற்று வீசியது, அவை அவ்வீடுகளின் மீது மோதியது. பாறைமீது கட்டப்பட்ட வீட்டிற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. மணல் மீது கட்டப்பட்ட வீட்டிற்கோ பேரழிவு நேர்ந்தது. மணல் மீது வீட்டைக் கட்டியவரை அறிவு குறைவுள்ளவர் என்று எண்ணிவிடக்கூடாது. ஒரு செயலை எப்படி செய்ய வேண்டும் என்று அறிந்தவர்தான்; ஆண்டவரே, ஆண்டவரே என்று ஆர்வமாக அழைப்பவர்தான்; ஆண்டவர் பெயரால் வல்ல செயல்களையும் செய்பவர்தான். ஆனாலும் பாறையாகிய ஆண்டவரின் மேல் ''கீழ்ப்படிதல்'' என்ற அடித்தளம் போடவில்லை. ஆகவே இந்த மேன்மையான கீழ்ப்படிதல் இல்லாத அறிவிலியின் வீடு அழிந்தது (எபி 10:26-27) பாறையாகிய இயேசுவின் வார்த்தைகளுக்குக் கீழ்படிவதால் மட்டுமே நாம் பாதுகாப்பு பெற முடியும். உண்மையை அறிந்திருந்தும் அவற்றின்படியே செய்யாமல், மேலோட்டமாக அடித்தளம் போட்டால் போதும், பாறை வரை ஆழமாக தோண்ட வேண்டியதில்லை, மேலும் தன் வீடு கட்டும் பகுதியில் ஆறு பெருக்கெடுத்து ஓடுவதற்கு வாய்ப்பில்லை.

தேவையற்ற செலவு செய்து ஆழத்தை நிரப்ப சிமெண்டையும் கல்லையும் ஏன் வீணடிக்க வேண்டும். வேலை செய்பவர்களுக்கு ஏன் கூடுதல் சம்பளம் கொடுக்க வேண்டும் என்று நினைத்து, பொறுப்பற்ற முறையில் செயல்படுகிறார். இயேசு ஆண்டவர் இவரை அறிவிலி என்கிறார். ஆண்டவர் எசேக்கியேலிடம் (33:30,31) கூறுவது போல உலகில் அனேக மக்கள் இறைவார்த்தைகளை வாசித்தும், அதன் விளக்க உரைகளைக் கேட்டும், அதன்படி செயல்படாத அறிவிலிகளாகத்தான் காணப்படுகிறார்கள். இறைவனுக்கு பணிந்து நடக்க வேண்டும் என்ற உணர்வு அற்றவர்களாகவே இருக்கிறார்கள். இறைவார்த்தையைக் கேட்கிறவர்களாக மட்டும் இருந்து உங்களை ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். அதன்படி நடக்கிறவர்களாயும் இருங்கள் என்று (யாக்கோபு 1:22) எச்சரிக்கிறார்.

உலகில் நமக்கு துன்பம் உண்டு. அவைகளைத் தவிர்க்க முடியாது. மழை எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். திடீரென அதிகமாகவும் பெய்யலாம். உடனே நின்று போகலாம். பெருமழைக்குப் பின்புதான் ஆறு பெருக்கெடுத்து ஓடும். அதனைத் தொடர்ந்து பெருங்காற்று வந்து பேரழிவுகளை உண்டாக்கும். இவை யாவும் இயற்கையாக நடப்பதுபோல் தோன்றினாலும் இவற்றின் பின்னனியில் சாத்தான் செயல்படுகிறான் (யோபு 1:19) என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எதிரியாக அலகை கர்ச்சிக்கும் சிங்கம்போல யாரை விழுங்கலாமெனத் தேடித் திரிகிறது. பாறையாகிய இயேசுவை அடித்தளமாக கொண்டவரை எந்த ஆபத்தும் பாதிப்பதில்லை. சில வேளைகளில் கடவுளே நமக்கு சில துன்பங்களை அனுமதிக்கிறார். அழியக்கூடிய பொன் நெருப்பினால் புடமிடப்படுகிறது. அதைவிட விலையுயர்ந்த உங்கள் நம்பிக்கை மெய்ப்பிக்கப்படவே துயருகிறீர்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும் போது அந்நம்பிக்கை உங்களுக்கு புகழும் மாண்பும் பெருமையும் தருவதாய் விளங்கும் (1 பேது 1:7) என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எத்தனை துன்பங்கள் வந்தாலும் நான் கடவுளையே நாடுவேன் அவரிடம் மட்டுமே என் வாழ்க்கையை ஒப்புவிப்பேன் (யோபு 5:8). என்னை அவர் புடமிட்டால் நான் பொன்போல் துலங்கிடுவேன் என்று யோபு கூறுகிறார். ஆகவே பாறையும் (1 கொரி 10:4) அடித்தளமும் (1 கொரி 3:11) வார்த்தையுமான (திவெ 19:11, யோவா 1:14) இயேசுவிடம் நம் வாழ்வை ஒப்புவிப்போம். ''சீயோனில் நான் ஓர் அடிக்கல் நாட்டுகிறேன்.. அது பரிசோதிக்கப்பட்ட கல், விலை உயர்ந்த மூலைக்கல் உறுதியான அடித்தளமாக அமையும் கல், நம்பிக்கை கொண்டோன் பதற்றமடையான்'' (எசா 28:16) என்கிறார் ஆண்டவர். ஆகவே எப்படிப்பட்ட பேராபத்துக்களை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டாலும் கற்பாறையாகிய இயேசுவை அடித்தளமாகக் கொண்டிருக்கும்போது எதுவும் நம்மை பாதிக்காது. பயப்பட வேண்டிய அவசியமும் இல்லை. இறை வார்த்தைகளைக் கேட்டு அதை கடைபிடிப்போர் பேறு பெற்றோர் (லூக் 11:28)

நாமும் இறை வார்த்தைகளைக் கேட்டு அதன்படி செயல்பட்டால் பாறையின்மீது வீட்டை கட்டிய அறிவாளிகள் என்ற பேற்றை பெற்று இறைவனோடு என்றென்றும் வாழ்வோம்.

இறைவார்த்தையைக் கேட்டு அவற்றின்படி செயல்படாத எவரும் 'அறிவிலி'

நற்பணி. **ஆரோக்கியசாமி. ஜே**

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 02. | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம்/அருள்சான்றுநிலையம் |
| 06. | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம், இடைக்காட்டூர் |
| 07. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி. காளையார்கோவில் |
| 07. | வட்டாரத் தியானக் கூட்டம் | மானாமதுரை, செஞ்சை, செக்காலை, சி.கே. மங்கலம் |
| 07. | தொடர் களப்பணி | குண்டுகுளம், வீரமங்கலம் |
| 13. | நற்பணி சந்தனபாக்கியம் மகள் துறவற அர்ப்பணத்தின் நன்றிவிழா | ஓச்சந்தட்டு |
| 13. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தங்கச்சிமடம் |
| 14. | புதிய பணியாளர்கள் பயிற்சி | இராமநாதபுரம், குருமிளாங்குடி அரிமளம் |
| 14. | வட்டாரத் தியானக் கூட்டம் | புளியால், முத்துப்பேட்டை, இராம்நகர், இரசசிங்கமங்கலம் |
| 14. | தொடர்களப்பணி | குண்டுகுளம், வீரமங்கலம் |
| 15. | நற்பணி S. ராஜேந்திரன் இல்ல முதல் திருவிருந்து விழா | சோதுகுடி |
| 19-21 | ஆண்டுத் தியானம் 2022-I | அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 21. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமைதியகம், சாயல்குடி |
| 21. | வட்டார தியானக் கூட்டம் | சிவகங்கை, பரமக்குடி, தேவகோட்டை |
| 20-21 | தொடர்களப்பணி | நானாக்குடி, அஞ்சுகோட்டை, மண்டலகோட்டை |
| 21 | தொடர்களப்பணி | குண்டுகுளம், வீரமங்கலம் |
| 26 | நற்பணி ரெபோக்கா இல்லத் திருமண விழா | த. சூசையப்பர்பட்டணம் |
| 26-28 | ஆண்டுத் தியானம் 2022-II | அமைதியகம், காயாவயல் |
| 27-28 | தொடர்களப்பணி | சாலைகிராமம், குருமிளாங்குடி கமுதி, தங்கச்சிமடம் |
| 28. | தொடர்களப்பணி | குண்டுகுளம், வீரமங்கலம் |
| 28. | வட்டாரத் தியானக் கூட்டம் | சருகணி |
| 28. | புதிய பணியாளர்கள் பயிற்சி | கமுதி, இரசசிங்கமங்கலம் |
| 28 | உண்ணாநோன்பு செபம் | சம்மனசூர், தஞ்சாவூர். |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 07.08.22 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி M. மரிய கிரகோரி<br>நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி T. குழந்தை தெரஸ் செயலர் |
| 07.08.22 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி A. சூசை அருள்மேரி<br>நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி A. அற்புத ஞானய்யா |
| 13.08.22 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி S. லூர்துமேரி<br>நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி K. பில்கேட் சாவியோ |
| 14.08.22 | புனித சுவக்கீன் அன்னாள் கோவில், குருமிளாங்குடி | நற்பணி M. சேசுநேசன்<br>நற்பணி X.சகாயலூயிஆரோக்கிசாமி<br>நற்பணி S. மேட்ச அலங்கரம் |
| 14.08.22 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி A. தனிநாயகம்<br>நற்பணி G. ஜெனிபர் செயலர் |
| 14.08.22 | புனித சூசையப்பர் கோவில் அரிமளம் | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>நற்பணி R. ராஜ்குமார்<br>நற்பணி S. அந்தோணிசேவியர்ராஜ் |
| 21.08.22 | அமைதியகம் காயாவயல் | நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி S. ஆரோக்கியசாமி<br>Sr. ஜோஸ்பின் பச்சைஜோதிCIC<br>நற்பணி S. சகாயராணி |
| 21.08.22 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. மரிய கிரகோரி<br>நற்பணி A. சந்திரபுஷ்பா<br>நற்பணி J. மேரி புஷ்பம் |
| 28.08.22 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி A. சந்தியேந்திரன்<br>நற்பணி S. மோட்சஅலங்காரம்<br>நற்பணி A. ஆரோக்கியஅமரி<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 28.08.22 | புனித அந்தோணியார் கோவில், கமுதி | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி லிட்வின்<br>நற்பணி I. ஜோசப் சேவியர் |

பெண் ஒருவர் ஒரு வயதான முதியவருக்கு தினமும் உணவு கொடுப்பார் அம்முதியவர் அவ்வுணவைப் பெற்றுக் கொள்ளும் போதெல்லாம், "நீ நன்மை செய்தால் நன்மை கிடைக்கும் தீமை செய்தால் தீமையே விளையும்" என்பார். பெண் இந்த வார்த்தைகளைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டே சென்று விடுவார்.

அதே மாதிரி அன்றும் உணவு கொடுக்கும்போது அம்மனிதர் கூற அப்பெண்ணுக்கு எரிச்சலும் கோபமும் வந்தது. நாம் பாவப்பட்டு இம்மனிதருக்கு உணவு கொடுக்கிறோம். இவரோ நமக்கு எப்போதும் இந்த வார்த்தைகளையே சொல்லிக் கொண்டிருக்கிறாரே என்று கோபப்பட்டவள் இவருக்கு விஷம் வைத்த உணவை கொடுத்தால் என்ன என்று யோசித்தாள். மறுநாள் உணவில் நஞ்சைக் கலந்தாள். ஆனால் அதை அவருக்குக் கொடுக்க மனமில்லாமல் அதைக் கொட்டிவிட்டு நல்ல உணவையே அளித்தாள்.

அன்று திடீரென்று அவளுக்கு அவளுடைய மகன் ஒரு விபத்தில் சிக்கி மீண்டு வந்ததாக ஒரு செய்தி வர பதறினாள். அவளுடைய மகன் லேசான காயங்களுடன் அவள் எதிரில் வந்து நின்று தன்னைக் காப்பாற்றியவரை அடையாளம் காட்டினாள். அது அவள் தினமும் உணவளித்த அந்த பெரியவர்தான்.

அந்தப் பெண் பதறினாள். ஒரு வேளை இன்று அந்த விஷஉணவை அவருக்குத் தந்திருந்தால்.... அவளால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. நீ நன்மை செய்தால் நன்மையே கிடைக்கும் தீமை செய்தால் தீமையே விளையும் என்ற அவரின் வார்த்தையின் உண்மை புரிய கடவுளுக்கு நன்றி கூறினாள். கடவுள் சிலரைக் கொண்டு பலரைத் தன் வழிக்கு அழைத்துக் கொள்கிறார். வாழ்வில் உண்மைத்தனத்துடன் தூய்மையாக வாழ கற்றுக் கொடுக்கிறார். இறைவன் குறிப்பிட்ட சில மனிதர்கள் மூலம் கற்பிக்கிறார், கண்டிக்கிறார், நெறிப்படுத்துகிறார் வழி நடத்துகிறார் என்பது நிஜமே.

கடவுளையும் மனிதர்களையும் இணைக்கும் பாலமாக இணைப்பாளர்களாக செயலாற்றுபவர்கள்தான் இறைவாக்கினர்கள். இறைவனின் இதயத்துடிப்பை உள்ளூர உணர்ந்து அவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதில் முனைப்புடன் நிற்பவர்கள். உண்மையை மக்கள் கண்டுகொள்ள திறக்கப்படும் சாளரங்கள் இவர்களே. இறைவனின் செய்திகளை இகமெங்கும் கொண்டு செல்பவர்கள். ஆபத்துக்களைக் கண்டு அஞ்சாமல் குரலுயர்த்தி மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பவர்கள் இவர்களே. தக்க நேரத்தில் இறைகுரலாய் ஒலித்து மக்களை நெறிப்படுத்தி வழிநடத்துபவர்கள்.

**பணியாளர்களின் விவிலிய வங்கி**

**மேலும் விவரங்களுக்கு 9787967272**

பலநூறு ஆண்டுகளுக்கு முன் அவர்கள் உரைத்த வாக்குகள் அனைத்தும் இயேசுவில் நிறைவேறியதை நாம் விவிலியம் முழுவதும் வாசிக்கலாம். இயேசு பகர்ந்த சான்றே இறைவாக்குகளுக்கு உயிர்மூச்சு (திவெ 19:10) என்கிறது இறைவார்த்தை. நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே இறைவாக்குகளுக்கும் திருச்சட்டங்களுக்கும் நிறைவாய் இருந்திருக்கிறார். அவர் வழி வந்த திருத்தூதர்களின் கூட்டமைப்பு, அதைத் தொடர்ந்து செயலாற்றும் நம் திருஅவை அனைத்திற்கும் இறைவாக்குகளே மையமாக இருந்திருக்கிறது. அவ்வகையில் இறைவாக்கினர் எலியாவைப் பற்றியும் நம் அன்னை மரியாவைப் பற்றியும் திருத்தூதர்களின் பணியைப் பற்றியும் சற்றே தியானிப்போம்.

"ஆண்டவர் தேர்ந்தெடுத்து அவரருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறு பெற்றவர்" (திபா 65:4), ஆம் தாம் தேர்ந்து கொண்டவர்களுக்கே தம் திருவுளத்தை வெளிப்படுத்தி அவர்களை ஒரு வல்லமையின் கருவிகளாக செதுக்கி பயன்படுத்துகிறார் நம் ஆண்டவர். எளிய உள்ளம் கொண்டவர்களையும் தாழ்ச்சி மனநிலை உடையவர்களையும் பற்றுறுதியில் திடனுடன் வாழ்பவர்களையும் தனக்கென தேர்ந்து கொண்டு அவர்களில் தமது குரலை ஒலிக்கச் செய்கிறார். அவர்களைக் கொண்டு அரிய செயல்களை ஆற்றி மக்களை நன்னெறிக்கு வரச் செய்கின்றார்.

**இறைவாக்கினர் எலியா**

இஸ்ராயேலின் அரசனும் மக்களும் எல்லோரையும் விட மிகுதியாக தீமைகள் செய்தபோது இறைவாக்கினர் எலியா அங்கே மழையை நிறுத்தி பஞ்சம் வரச் செய்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் மழையை பெய்விக்கவும் செய்தார். இந்நிகழ்வு ஆண்டவரில் அவர் கொண்டிருந்த பற்றுறுதிக்கும் ஆண்டவர் அவர் மீது வைத்த நம்பிக்கைக்கும் சான்றாக அமைந்துள்ளது. மக்கள் மனம் திரும்பும்படி கடவுள் தமது இறைவாக்கினர்களுக்கு இயற்கை மூலமும் செயலாற்றினார் என்பது அவரின மேன்மையை எடுத்துரைக்கிறது.

அது மட்டுமல்லாமல் உண்மை இறைவன் யார் என்று மக்கள் அறிந்து கொள்ளும்படி ஒரு சவாலை பாகாலின் பொய் இறைவாக்கினர்களுக்கு எதிராக வைத்து மக்கள் அனைவரும் உண்மை தெய்வத்தைக் கண்டுணரும்படியாக கடவுளுக்கு பலி செலுத்தினார். கடவுளும் அனைவர் முன்பாக அவரின் பலியை ஏற்றுக்கொள்ள அங்கே ஒரு மாபெரும் மனமாற்றம் ஏற்பட்டது. இறைவாக்கினர்களின் சொல்லும் செயலும் ஒரு பொதுநலனை புது வாழ்வை அளித்து இறைநெறிக்கு மக்களை அழைத்துச் சென்றது என்பது நிதர்சனமான உண்மை.

தவறுகள் குற்றங்கள் நடக்கும்போது அதைச் சுட்டிக்காட்டி ஆண்டவரின் பெயரால் கண்டனக்குரல் எழுப்பியதிலும் இறைவாக்கினர்களின் வார்த்தைகள் உரத்து ஒலிக்கின்றன என்பதை நாபோத்தின் திராட்சை தோட்ட நிகழ்வினில் காணமுடிகிறது. அநியாயமாய் தனது உடைமைகளையும் உயிரையும் இழந்துபோன நாபோத்தின் சார்பில் கடவுள் இறைவாக்கினர் வழியாக பேசினார். அந்த தவறுக்கான தண்டனை அரசன் ஆகாபிற்கும் ஈசபேலுக்கும் கிடைத்தது என்பதைப் பார்க்கிறோம்.

இறைவாக்கினரின் பசிக்கு உணவளித்த சாரிபாத்துக் கைம்பெண்ணின் இரக்கத்திற்கானப் பரிசாக வாழ்நாளெல்லாம் நிறைவான உணவளித்தது ஆண்டவரின் இரக்க மனதைப் பிரதிபலிக்கிறது. ஒரு பணி தொடர்செயலாக

நிறைவேற தனக்குப் பின் தகுந்தவர்களைத் தேர்ந்தெடுப்பதில் ஆளுமையும் தகைமையும் வெளிப்படும். அவ்வகையில் இறைவாக்கினர் எலியா எலிசாவைத் தேர்ந்தெடுத்தார் என்பது அவரின் முதிர்ச்சியான அனுபவத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

அரசனனாலும் ஆண்டியானாலும் தப்பை தப்பென்று சுட்டிக்காட்டிய விதத்திலும், உண்மை தெய்வத்தை மக்கள் கண்டுணர்ந்து அவர்கள் கடவுளை பின்பற்ற வைத்த விதத்திலும் இயற்கைக்கு எதிராக செயல்பட்ட விதத்திலும் ''இறைவாக்கினர் எலியா நெருப்புப் போல எழுந்தார். தீவட்டி போல் அவரின் சொல் பற்றியெரிந்தது. ''எலியாவே உம்முடைய செயல்களில் நீர் எத்துணை மாட்சிக்குரியவர்'' (சீராக் 48:1-4) அவரின் பணிகளில் தனி மனித அன்பு இருந்தது. நீதி இருந்தது. மக்களின் மீட்பு அவரின் நோக்கமாக நிறைவேறியதைக் காண்கிறோம். இறைவாக்கினர் எலியாவின் பணியைப் போலவே திருத்தூதர்களின் பணியும் அமைந்திருந்தது என்பதை சில நிகழ்வுகளின் பொருத்திப் பார்க்கலாம்.

**அன்னை மரியாவின் இறைவாக்கு:**

அன்னை மரியா தனது பாடல் வரிகளில் கூறிய வார்த்தைகள் இறைவாக்குகளாக நிறைவேறின என்பது வெள்ளிடைமலை. அவரின் வார்த்தைகளில் ஆன்மீக, சமூக, சமுதாய, அரசியல் எழுச்சி இருப்பதை ஆழமாக தியானித்து அறிந்து கொள்ளலாம். இறையச்சத்தோடு வாழும் மக்களின் தலைமுறைகள் என்றென்றும் ஆசிகளை தக்க வைத்து பேறு பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதையும், செருக்கு இறுமாப்பு உடையவர்கள் சிதறடிக்கப்படுவர் என்பதையும் உரைக்கின்றார் நம் அன்னை. வலியவரை அரியணையிலிருந்து தூக்கி எறிந்து தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார் என்ற வார்த்தைகளில் உறைந்திருந்த உண்மை இயேசுவில் நிறைவேறியது. தாழ்நிலையில் இருந்த பாவிகள், ஏழைகள், ஒடுக்கப்பட்டோர் நோயாளிகள் அனைவரும் இயேசுவில் பாவ மன்னிப்பும் புதுவாழ்வும் பெற்று விண்ணகத்திற்கு உரியவர்களாக உயர்ந்து நின்றார்கள்.

தாங்கள் மட்டுமே உயர்ந்தவர்கள் என்று வாழ்ந்த பரிசேயர், சதுசேயர், மறைநூல் அறிஞர்கள் இயேசுவால் கண்டிக்கப்படுகின்றனர். ''தம்மைத் தாமே உயர்த்துவோர் யாவரும் தாழ்த்தப் பெறுவர். தம்மைத் தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர்'' (லூக் 14:11) என்ற தமது வார்த்தைகளால் அன்னையின் இறைவாக்கினை நிறைவேறச் செய்கின்றார் நம் இயேசு. அவர் மீதும் அவர் வார்த்தைகள் மீதும் பசி, தாகம் கொண்டிருந்த அனைவரும் நிலைவாழ்வின் நல்ல பங்கைப் பெற்றுக் கொள்வர் என்பது உறுதி.

இறைவாக்கினர் எலியாவைப் போல அன்னை மரியைப் போல ஒளிர்ந்து சுடர் விட்டவர்கள் நம் திருத்தூதர்கள். அவர்களின் உயிராற்றலுள்ள பணிகளில் மிளிர்ந்த உத்வேகமும் உண்மைத் தன்மையும் மக்களின் மனமாற்றத்திற்கு வழிவகுத்தது. உண்மை இறைவனை நோக்கி மக்களை ஈர்த்து அவரில் நிலைபெறச் செய்தது. உலகெங்கும், உலகின் கடையெல்லை வரைக்கும், கடவுளின் நற்செய்தியைக் கொண்டு போய் சேர்த்தது. திருத்தூதர்களின் திருஅவை கூட்டாக, ஒருங்கிணைந்து எப்படி பயணிக்க வேண்டும் என்பதை வருங்கால தலைமுறைகளுக்கு கற்றுக் கொடுத்து விட்டுச் சென்றது.

இன்றும் நம் திருஅவை ''பாறையின் மேல் கட்டப்பட்டதாக'' உறுதித் தன்மை பெற்று இணைந்து பயணித்துக் கொண்டு வருகிறது. தூய ஆவியானவர் நம்

திருஅவையை வழிநடத்தி வருகிறார். திருஅவையில் ஒளிந்து மறைந்து கொண்டிருக்கும் ஜாதியம் ஒளிந்து அதிகார மேலாதிக்கம் களைந்து எதை எதையெல்லாம் விட்டுவிட வேண்டுமோ அதையெல்லாம் விட்டுவிட்டு எதை எதை செம்மைப்படுத்த வேண்டும் எவற்றையெல்லாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எதை எதையெல்லாம் கூர்மைப்படுத்த வேண்டும் என்பதை சரி செய்து விட்டால் திரு அவை "ஆட்டுக்குட்டியின் திருமண விழாவிற்கு ஆயத்தமாயிருக்கிற மணமகளாய் நீதி செயல்கள் என்ற தூய்மையான பளபளப்பான விலையுயர்ந்த ஆடை அணிந்த மணமகளாய் அணி செய்து கொண்டு" (திவெ 19:9) அவரின் இரண்டாம் வருகைக்கு காத்திருக்கும். அதற்கு நமது பங்களிப்பு எதுவென்று அறிந்து குரல் கொடுப்போம். நம் நல்ல சிந்தனைகளும் செயல்களும் திருஅவையை சீர்செய்து கூட்டொருக்கியக்கியமாய் அனைவருடனும் கைகோர்த்து பயணிக்கட்டும்.

நற்பணி. **ஜெஸி**

| ஆண்டுத் தியானம் 2022 | 19-21/08/22 அருள்சான்று | 26-28/08/22 அமைதியகம் | 02-04/09/22 அமைதியகம் | 09-11/09/22 அருள்சான்று | 16-18/09/22 அருள்சான்று | 23-25/09/22 அமைதியகம் | 14-16/10/22 அருள்சான்று | 21-23/10/22 அமைதியகம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. இராமேஸ்வரம் | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 24 |
| 2. தங்கச்சிமடம் | 5 | 5 | 6 | 6 | 6 | 5 | 6 | 5 | 44 |
| 3. பாம்பன் | 4 | 4 | 4 | 3 | 3 | 3 | 3 | 3 | 27 |
| 4. இராமநாதபுரம் | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 4 | 39 |
| 5. முத்துப்பேட்டை | 5 | 5 | 5 | 5 | 4 | 4 | 4 | 4 | 36 |
| 6. பரமக்குடி | 8 | 8 | 8 | 8 | 8 | 8 | 11 | 8 | 67 |
| 7. ம. மிக்கேல்பட்டணம் | 3 | 3 | 3 | 3 | 3 | 3 | 4 | 3 | 23 |
| 8. கமுதி | 4 | 3 | 3 | 4 | 3 | 3 | 4 | 3 | 24 |
| 9. சாயல்குடி | 3 | 2 | 2 | 3 | 3 | 2 | 3 | 3 | 21 |
| 10. சாலைகிராமம் | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 31 |
| 11. மானாமதுரை | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 4 | 4 | 38 |
| 12. இடைக்காட்டூர் | 6 | 6 | 6 | 6 | 6 | 6 | 4 | 5 | 45 |
| 13. சிவகங்கை | 5 | 5 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 34 |
| 14. காளையார்கோவில் | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 4 | 32 |
| 15. சருகணி | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 4 | 4 | 38 |
| 16. புளியால் | 4 | 5 | 5 | 5 | 5 | 5 | 4 | 4 | 37 |
| 17. இராசசிங்கமங்கலம் | 5 | 5 | 5 | 5 | 4 | 4 | 4 | 4 | 36 |
| 18. சி.கே. மங்கலம் | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 4 | 4 | 38 |
| 19. இராம்நகர் | 5 | 6 | 6 | 5 | 5 | 6 | 5 | 6 | 44 |
| 20. தேவகோட்டை | 5 | 5 | 5 | 4 | 4 | 5 | 4 | 5 | 39 |
| 21. செஞ்சை | 5 | 6 | 6 | 5 | 5 | 6 | 5 | 5 | 43 |
| 22. செக்காலை | 4 | 5 | 5 | 3 | 4 | 5 | 3 | 4 | 34 |
| 23. ஆவுடைபெய்கை | 5 | 5 | 5 | 4 | 4 | 5 | 4 | 5 | 37 |
| | **107** | **104** | **109** | **104** | **101** | **105** | **100** | **98** | **828** |

## வட்டார தியானக் கூட்டம்

| வ.எ | தேதி | வட்டாரம் | தொடர்பாளர் |
|---|---|---|---|
| 01. | 07 | செஞ்சை<br>9442758641 | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>9442254152 |
| 02. | 07 | செக்காலை<br>9150579311 | நற்பணி M. சேவியர்<br>9442857812 |
| 03. | 07 | சி.கே. மங்கலம்<br>9360631802 | நற்பணி L. ஜோசப்இருதயம்<br>99431 65532 |
| 04. | 14 | இராம்நகர்<br>9442959569 | நற்பணி M. மரியகிரகோரி<br>9486955799 |
| 05 | 14 | புளியால்<br>9787491588 | நற்பணி Sr. ஜோஸ்பின் பச்சைஜோதி CIC<br>7708282117 |
| 06. | 14 | முத்துப்பேட்டை<br>9940745169 | நற்பணி J. மேரி புஷ்பம்<br>9489264448 |
| 07. | 14 | பரமக்குடி<br>9443503294 | நற்பணி GMS. ராணி<br>9655264448 |
| 08. | 21 | இராசசிங்கமங்கலம்<br>9843752061 | நற்பணி A. சூசைஅருள்மேரி<br>9976406232 |
| 09. | 21 | தேவகோட்டை<br>9095866732 | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311 |
| 10. | 21 | சிவகங்கை<br>9095866732 | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>9443157260 |
| 11. | 28 | சருகணி<br>9943632636 | செயலர்<br>9787967272 |

கண்காணிப்பாளர்கள் சம்பந்தப்பட்ட தொடர்பாளர்களை தொடர்பு கொண்டு குறிப்பிட்ட நாட்களில் கூட்டத்தை நடத்தி அதன் அறிக்கையை அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஒருங்கிணைப்பாளர்**

## ஒரு பணியாளரின் மன்றாட்டு

மனம் திரும்புவோருக்கு மன்னிப்பு வழங்கும் இறைவா! (சீராக் 19:29) மன்னிப்பு என்பது கோழைத்தனம் அல்ல மாறாக அன்பின் வெளிப்பாடு என்று உணர்ந்து, உம்மைப்போல் எந்த சூழலிலும், எந்த மனிதரையும் மன்னிக்கவும் அவர்களுக்காகச் செபிக்கவும் (லூக் 23:34) வேண்டிய மனநிலையை தர வேண்டுமேன்று உம்மை வேண்டுகின்றேன்.

## தொடர் களப்பணி

| வ.எ | தேதி | கிளை பங்கு பெயர் | பணியாற்றுபவர்கள் |
|---|---|---|---|
| 1. | 07 | குண்டுகுளம், வீரமங்கலம் | நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி |
| 2. | 14 | குண்டுகுளம், வீரமங்கலம் | நற்பணி L. ஆராக்கியசாமி<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 3. | 21 | குண்டுகுளம், வீரமங்கலம் | நற்பணி A.R. சூசைராஜ்<br>நற்பணி T. குழந்தை தாஸ் |
| 4. | 28 | குண்டுகுளம், வீரமங்கலம் செயலர் | நற்பணி R. ஆராக்கியசாமி<br>நற்பணி G. மிக்கேல் பிரபாகர் |
| 5. | 20-21 | ஓரியூர், மண்டலக்கோட்டை | நற்பணி A.R. சூசைராஜ்<br>நற்பணி S. அந்தோணிபிரகாஷ் |
| 6. | 20-21 | நானாக்குடி | நற்பணி V. செபாஸ்டின் தார்சிஸ்<br>நற்பணி A. ஆரோக்கியம் |
| 7. | 20-21 | அஞ்சுகோட்டை | நற்பணி M. சேசுநேசன்<br>நற்பணி J. அலெக்சாண்டர் |
| 8. | 27-28 | சாலைகிராமம், சீவலாதி | நற்பணி X. அந்தோணி விக்டர்<br>நற்பணி A. அந்தோணி பிரபு |
| 9. | 27-28 | கமுதி | நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி T. மிக்கேல் |
| 10. | 27-28 | குருமிளாங்குடி | நற்பணி P. பிரகாசம்<br>நற்பணி A. சேவியர் |
| 11. | 27-28 | தங்கச்சிமடம், அரியான்குண்டு | நற்பணி J. மேரி புஷ்பம்<br>நற்பணி G. ஜெனிபர் |

## என்னை மன்னியும்

பிறருக்கு எதிராகப் பொய்ச்சான்று சொல்லாதே என்பதை மறந்து, பிறருக்கு எதிராகப் பொய்ச்சாட்சி சொல்லி பிறருடைய வாழ்வையும், அவரின் மனதையும் நோகச் செய்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா என்னை மன்னியும் (இச 5:20).

இளைஞர்களே நீங்கள் முதியவர்களுக்குப் பணிந்திருங்கள். ஒருவர் மற்றவரோடு பழகும்போது எல்லாரும் மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள் என்பதை மறந்து முதியவர்களுக்குப் பணிந்து நடவாமல் ஆணவத்தோடு இருந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா என்னை மன்னியும் (1 பேதுரு 5:5).

உங்கள் நம்பிக்கை சோதிக்கப்படும்போது மன உறுதி உண்டாகும் என்பது உங்களுக்குத் தெரியும் என்பதை மறந்து, நம்பிக்கை சோதிக்கப்படும்போது மன உறுதி இல்லாமல், அவ நம்பிக்கையோடு வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா என்னை மன்னியும் (யாக் 1:3).

நற்பணி S.P. **சவரிமுத்து,**
இராம்நகர்

## செயல்களில் காட்டுவோம்

ஒவ்வொரு மனிதனும் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும் போது பிறப்பு நிலை (ஜென்ம) பாவத்தோடு பிறக்கிறார். நாம் திருமுழுக்கு என்ற அருள் அடையாளத்தை பெற்ற பின் கடவுளின் பிள்ளையாகிறார். நமது வயது வளர வளர நம்மில் இருக்கும் பாவ உணர்வு இந்த உலகத்தின் மீதும் அதிலுள்ளவை மீதும் அன்பு செலுத்தி மனம் போனபோக்கில் வாழ்வதால் கடவுளின் அன்பை இழந்து விடச்செய்கிறது. நமது ஊனுடலாம் நாம் செய்வது என்னவென்று நமக்கே தெரிவதில்லை. எதைச் செய்ய விரும்புகிறோமோ அதை நாம் செய்ய முடிவதில்லை. எதை வெறுக்கிறோமோ அதையே செய்கிறோம். நாம் விரும்பாததை செய்கிறோம். ஏனெனில் நாம் ஒவ்வொருவரும் தம் சொந்த தீய நாட்டத்தினாலே சோதிக்கப்படுகிறோம். அது நம்மை மயக்கி தம் வயப்படுத்துகிறது. பின்னர் தீய நாட்டம் கருக்கொண்டு பாவத்தை பெற்றெடுக்கிறது. அந்தப் பாவத்தினாலே நாம் விரும்புவதை செய்ய முடிவதில்லை.

இயேசு ஆண்டவர் நிக்கதேமுவை பார்த்து நீ மறுபடியும் பிறக்காவிட்டால் இறையாட்சியை காணமுடியாது என்றும் ஒருவர் தூய ஆவியாலும், திருமுழுக்காலும் பிறக்க வேண்டுமென்றும் கூறினார். நாம் மறுபடி பிறக்க வேண்டுமானால் நம்முடைய பழைய இயல்புகள் கலைந்து விட்டு புதிய பிறப்பாக, புதிய படைப்பாக நம்முடைய பழைய செயல்கள், சிந்தனை, பேச்சு, பெருமை எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டும். அவ்வாறாக பழைய இயல்புகளைக் களையும்போது ஆண்டவர் நம்மோடு இணைந்து செயல்படுவார். பாவம் செய்யும் எவரும் அவரை காண முடியாது (1 யோவா 3:6). ஆண்டவர் நம்மை உரிமை வாழ்வுக்கு அழைத்திருக்கிறார். அந்த உரிமை வாழ்வு ஊனியல்பின் செயல்களுக்கு வாய்ப்பாய் இராதபடி பார்த்துக் கொள்வோம். வீண் பெருமை தேடாமலும், ஒருவருக்கொருவர் எரிச்சலூட்டாமலும் ஒருவர் மற்றவர் மீது பொறாமை படாமலும் இருந்து கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள உலக காரியங்கள் எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுவோம்.

மனம் போன போக்கில் வாழாமல் நமது இதயம் சொல்வதை கேட்டு மனம் மாறியவர்கள் என்பதை நமது செயலில் காட்டுவோம்.

நற்பணி **M. சேசுநேசன்.** C.K. மங்கலம்


இப்ப இல்லாட்டி எப்ப?
-எல்லாரோ

நசுக்குகிற கரங்களுக்கும் கூட வாசனை தருகிற
மலர்களைப்போல வாழப் பழகுவதுதானே சீடத்துவ வாழ்வு.

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப**

தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம்.
எனவே, ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம்.
கலா 5:25

**அம்புரோஸ் அறநெறி அமைப்பு**
**மேலும் விவரங்களுக்கு** **9787967272**

## இறைக்குரல்

1. ஆண்டவரின் சொற்கள் நாவிற்குசுவையும்
   வாய்க்கு இனிமையும் அன்றோ
2. நலம் தருவதும் இனிமையானதும் எது?
   தேன்கூடு போன்ற இன்சொல்லாம்
3. தொண்டையுள் புகும்போது இனிமை பிறகோ
   பாம்புபோல் கடிக்கும் மறவாதே.
4. ஞானமறிவு மனிதருக்கு இனியது அது
   அடைந்தவருக்கு பயன்தரும் நம்பிக்கை
5. பசும்பொன்னிலும் தேனடை சிந்தும் தெளிதேனினும்
   இனியது கடவுளின் நீதிநெறிகளே
6. பூங்கா போன்றது இரக்கம் இது
   வாழ்வில் கிட்டும் இன்பம்.
7. கடவுளைப் புகழ்வது இனிமையானது இதுவே
   இறைவனுக்கு ஏற்புடைய செயல்.
8. கடவுளுக்கு அஞ்சி கட்டளைக்குக் கீழ்படிதலைவிட
   உலகில் இனிதானது ஏதுமில்லை
9. இஸ்ரயேல் உழைக்காமலே வானவர் உணவால்
   ஊட்டி வளர்த்தவர் ஆண்டவர்.
10. ஆண்டவர் இனியவரென்று சுவைத்து அவரிடம்
    அடைக்கலம் புகுவோர் போறுபெற்றோர்.

## இனிமை

அமரர் நற்பணி **M. சந்தியாகு,** மேலமங்களம்

## செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

- பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் சிறு மற்றும் நடுத்தர வணிகர்கள் பாதுகாக்கப்பட
- விலைவாசி உயர்வு, பொருளாதார மந்த நிலையால் ஏழைகளின் வாழ்வாதாரம் பாதிப்படையாமலிருக்கு
- இந்தியாவில் மேலோங்கி வரும் மத தீவிரவாதத்தின் கொடிய விளைவுகளை உணர்ந்து அதை வேறறுக்க மக்கள் இணைந்து செயல்பட
- நாட்டின் சனநாயக நிறுவனங்களும் அமைப்புகளும் பாசிச சிந்தனைகளிலிருந்து பாதுகாக்கப்பட
- ஆயர் மாமன்ற தயாரிப்புப் பணிகளுக்காக
- ஆண்டு தியானங்கள் நற்செய்திப் பணியாளர்களுக்கு சீடத்துவ புதுப்பித்தலை வழங்கிட

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- நாட்டின் வளர்ந்து வரும் மத தீவிரவாதம் ஒழிய அதிகாலையில் நம்பிக்கையோடு முழங்காலிருந்து செபித்தல்.

படங்களைத் தொண்டு இறைவார்த்தையை தன்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **1 சாமுவேல் 1-3 அதிகாரங்களுக்குள்**

வட்டாரத் தியானக் கூட்டம்- காளையார்கோவில்

புதிய பணியாளர்கள் பயிற்சி - குருமிளாங்குடி

அருளமுது ஆதாரக் குழுக் கூடுகை - அமைதியகம்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram, Vendhoni (B.P.O.)
Paramakudi - 623 701, Ramnad Dist. Tel : 04564- 230453.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com